1974 சனவரி 25]

THIRU K. S. KOTHANDARAMIAH : Though it is called Palar, there is neither 'Pal' பால் nor water in it. Unless water is brought from other sources, water will not flow in Palar. Will the Hon. Minister for Public Works tell us whether he would try to bring in waters of Godavari or Krishna via Dharmapuri district and then divert the water to Palar?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இது வேறு தனிப்பிரச்னை. உறுப்பினரவர்கள் தனியாகக் கேள்வி போடவும்.

சேத்தூர் வாய்க்கால் திட்டம்

* 168 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் தாலுகா சேத்தூர் வாய்க்கால் வெட்டப்பட டெண்டர் விட்டு 2 வருட காலமாகியும் வெட்டி முடிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நில ஆர்ஜிதத்திற்கான சில புலன்களின் சர்வே எண்களில் முரண்பாடு இருந்ததால் இத் திட்டம் செயலாக்கத்திற்கு முன்னதாகவே எடுத்துக் கொள்ளப் படாமல் இருந்தது. தற்சமயம் இத்திட்டத்திற்கான வேலைகளில் 95 விழுக்காடு முடிக்கப்பட்டுவிட்டன. மார்ச் 1974-க்குள் மீத முள்ள வேலைகள் யாவும் முடிவடைந்துவிடும்.

கூட்டுறவு நூற்பாலைகள்

* 169 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தமிழகத்தில் தற்போதுள்ள கூட்டுறவு நூற்பாலைகளுள் லாபத்தில் இயங்கி வருபவை எவையெவை ?

[1974 சனவரி 25

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1972-73-ம் ஆண்டில், மொத்தம் 12 நூற்பாலைகளில் கீழ்க்கண்ட 10 ஆலைகள் இலாபத்தில் இயங்கின :—

1. தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பாலை, பேட்டை.
2. திருவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை, திருவில்லிபுத்தூர்.
3. சேலம் கூட்டுறவு நூற்பாலை, சேலம்.
4. வடாற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, வேலூர்.
5. தஞ்சை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மணல்மேடு.
6. மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மேலூர்.
7. கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, தாராபுரம்.
8. திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, கரூர்.
9. கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரம் போலி.
10. காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை, காஞ்சிபுரம்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, 12 நூற்பாலைகளில் 10 நூற்பாலைகள் 1972-73-ல் லாபம் ஈட்டியிருப்பதாகச் சொன்னார்கள். மற்ற ஆலைகளை விட கூட்டுறவு நூற்பாலைகளில் கூலி குறைவாகக் கொடுக்கப்படுகிறது. அப்படி இருந்தும் 10 ஆலைகளில்தான் லாபம் கிடைத்து இருக்கிறது. மற்ற இரண்டு ஆலைகளில் லாபம் கிடைக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அரசு ஆராய்ந்து இருக்கிறது, அப்படியானல் என்ன காரணம் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1968-ம் ஆண்டில் அந்த ஆலையின் மொத்த நஷ்டம் 207 லட்ச ரூபாய். இப்போது மொத்த நஷ்டமும் 'அக்யூமுலேடட் லாஸ்' 59 லட்சம். அந்த அளவிற்கு முன்னேற்றத்தை நோக்கிப்போய்கொண்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த 12 ஆலைகளில் 10 ஆலைகள் லாபகாரமாக ஓடிக்கொண்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறினர்கள். அதிலே சில மில்களிலே 12,500 கதிர்கள்தான் இருக்கின்றன. அதை 25,000 கதிர்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் வழி வகை செய்யுமா? அதிலே

1974 சனவரி 25]

'ஓர்க்கர்ஸ் பார்ட்டிசிபேஷன்' என்ற முறையில் தொழிலாளர்களுக்குப் பங்கு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நஷ்டத்திற்கு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறியதும் ஒரு காரணம். அரசாங்கம் கொள்கை அளவில் எல்லா ஆலைகளும் 25,000 கதிர்களாக மாற்ற வேண்டுமென்று ஒப்புக்கொண்டு, படிப்படியாக அதை நிறைவேற்றி வருகிற முயற்சியினை மேற்கொண்டிருக்கிறோம். கூட்டுறவு நூற்பாலைகளைப் பொறுத்தவரையில், 'கன்ஸ்யூமர்ஸ்' அதாவது நம்முடைய கூட்டுறவுச் சங்கங்கள் தான் இதிலே அங்கத்தினர்களாக, பங்குதாரர்களாக இருக்கிறார்கள். தொழிலாளர்களைப் பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்போது கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூலிலே எத்தனை சதமானம் 'ஹேங்க் யார்ன்', எத்தனை சதமானம் 'கோன் யார்ன்' என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் பெரும்பாலும் கைத்தறிக்குத் தேவையான நூலை நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நூலைக் கொடுத்து விட்டு, மீதி நமக்கு இருப்பதைத்தான் பவர் லூம்களுக்குத் தேவையான கோன் யார்ன் உற்பத்தி செய்கிறோம்.

திரு. த. சோணையா : தலைவரவர்களே, 10 மில்களிலே லாபம் இருப்பதாகச் சொன்னார்கள். இந்த மில்கள் அமைக்கப்படுகிற பகுதிகள் எல்லாம் ஓரளவிற்கு முன்னேற்றம் அடைந்த பகுதிகளிலேயே இருக்கின்றன. ஓரளவிற்குப் பின்தங்கிய பகுதிகளில், முன்னேற்றம் அடையாத பகுதிகளில் இந்த மில்களை இனிமேலாவது அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது செய்யப்பட்டு வருகிறது.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, ஒவ்வொரு மில்லிலும் எவ்வளவு லாபம் கிடைத்தது? டிவிடென்ட் எந்தெந்த முறையில் பகிர்ந்து அளிக்கப்பட்டு இருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டிவிடென்ட் கொடுத்து இருக்கின்ற மில்கள் சௌத் இந்தியா, வடாற்காடு, சேலம் நூற்பு ஆலைகள். அதே போல் 1972-73-ல் சேலம், திருவில்லிப்புத்தூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் கொடுத்து இருக்கிறேம்.

*170 வினு—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கைப் பகுதியில் நூற்பாலை ஒன்று துவங்கும் திட்டம் ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிவகங்கையில் தனியார் துறையில் நூற்பாலை ஒன்றைத் துவக்க மத்திய அரசு ஒரு உரிமம் வழங்கியுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த நூற்பாலை எப்போது துவங்கப்படும், இப்போது எந்த அளவில் ஆக்கப் பணி இருந்து கொண்டிருக்கிறது என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விரைவில் தொடங்கப்படும்.

விண்ணமங்கலம் தோல் பதனிடும் தொழிற்சாலை

*171 வினு—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வடார்க்காடு மாவட்டத்தில் விண்ணமங்கலம் அரசு தோல் பதனிடும் ஆலை இதுவரை ஈட்டிய லாபம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1971-72-ம் ஆண்டு முடிய நட்டம் போக கிடைத்த லாபம் ரூபாய் 1.14 இலட்சம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, அந்த விண்ணமங்கலம் தோல் பதனிடும் ஆலை நல்ல லாபம் பெற வாய்ப்பு பெற்று இருக்கிறது என்று கூறப்படுகிறது. அதை விரிவுபடுத்த செயற் குறிப்பு இருக்கிறதா ? மத்திய அரசாங்கம் அறிவித்து இருக்கிற தோல் கட்டுப்பாடு கொள்கையின் காரணமாக இது போன்ற கூட்டுறவுத் தொழிற்சாலைகளும், தனியாரும் மிகவும் பாதிக்கப்